
# சிரித்திரன்

Double



அரியணை ஆட்டும் நரி

ஆடி, ஆவணி - 1993

விலை:
ரூபா:
15

# களஞ்சியப் பெட்டகத்திலிருந்து யாசகம் செய்கின்றோம்.




வியர்வையெனும் விதைகள் விதைத்து வளர்ந்த நாகரீகமெனும் சோலை நிழலில் உலகம் வாழ்கின்றது. சோலைக் கனிகள் எமக்கில்லை சோகக் கனிகள்தான் எமக்கு உண்டு.

நாம் அந்நிய ஆண்டானுக்கு பேனா ஓட்டிகளாக இருந்ததே எமது வரலாறு, எமது நாட்டைச் சுரண்டி சீமைக்கு ஏற்றுமதி செய்யும் நிர்வாக இயந்திரத்தின் ஓட்டுனராக இருந்து விட்டோம்.

''கோழி மேய்க்கிலும் கோர்ணமேந்தில் மேய்க்க வேணும்'' என்ற மோகம் அன்று இருந்தது. இன்று ''கோழி மேய்க்கிலும் வெளிநாட்டில் மேய்க்கவேணும்'' என்ற மோகம் எம்மை மயக்குகிறது. அந்நிய நாட்டில் வேலை பார்க்கும் மணமகனுக்கே தமது பெண்ணைத் தாரை வார்த்து தெத்தம் செய்து கொடுக்கிறார்கள்.


அன்று எமது சிங்கள அரசியல் அண்ணல்கள் எமது பொருளாதாரத்தை ''காசுக் கட்டளைப் ''பொருளாதாரம்(Money order economics) என்று கிண்டல் செய்வார்கள். யாழ்ப்பாணத்தவர் கொழும்புக் காசுக் கட்டளை கண்டுதான் வேலி அடைப்பார்களாம்.

வெள்ளிப் பாத்திரம் நிறைய வெண்ணெய் வைத்து நெய்க்கு அலைவதுதான் எம்நிலை. விவசாயம் செழிக்கும் மண்ணையும் வளம் கொழிக்கும் கடலையும் வைத்துக்கொண்டு அந்நிய நாட்டுத் தாவாரத்தை, பணத்தை தஞ்சமென இருக்கிறார்கள். அவர்களுக்கு தன்மானம் குழியில், பணம் கோபுரத்தில்

ஒரு அமெரிக்க புவியியல் நிபுணர் யாழ்ப்பாண மண்ணைப் பார்த்துவிட்டு ' இது கனிதரும் கலிபோர்னியா மண்' எனப் பாராட்டினார். மீன் கனத்த கடல் சூழ்ந்திருக்கும் தீவில் டின் மீன் இறக்குமதி செய்வது புதுமையிலும் புதுமை என விசனப்பட்டார்.

பொருளாதார வரிசையில் எல்லா நாடுகளும் முன் வரிசையில் நிற்க நாங்கள் மட்டும் 'க்கியூ' வரிசையில் ''போறா'' பையுடன் நின்று நிவாரணம் ஏந்துகிறோம்.

தன்மான உணர்வு என்று துளிர்விடுகிறதோ அன்றுதான் நாடு செழிக்கும். பொருளாதாரம் கொழிக்கும். ○



# பிருந்தாவனம்

○ பேனாக்கள்
துலாக்களாகட்டும்
அறிவுக்கிணற்றிலிருந்து
எண்ணங்களை அள்ளிட......
பத்திரிகைகள்
வாய்க்கால்களாகட்டும்
அதை
சமூகப்பயிரிற்கு பாய்ச்சிட....

○ பால் சுமக்கின்ற
தாயின் மார்பில்
சாய்ந்தபடி
குழந்தை யொன்று
புட்டிப்பால்
குடிக்கின்றது .

○ வண்ணத்துப் பூச்சிகளாக
வளாகத்தில்
வலம்வர வேண்டியவர்கள்
நூல்களைப் போர்த்தி
கூட்டுப் புழுக்களாக ......

○ எண்ணங்களும்
பதுங்கு குழிகளுக்குள்
பதுங்கவேண்டியதில்லையே
எழுதுகோல்களை ஏந்தியே
எழுந்திடட்டும்.

○ வெட்டி வீழ்த்தப்பட்டாலும்
நாம்
பட்டுப் போய்விடமாட்டோம்
வேர்களில் கூட
அரும்புவோம்
வான்முகில் தழுவ
விருட்சமாக விரைவோம்.

○ தங்கள் வேலிகளினால்
எல்லையிட்டு அதனுள்
குறுகிக் கொண்ட இதயங்
களிருக்க
தேசத்தின் எல்லையையே
இதயங்களுக்குள்
இருத்திக் கொண்டவர்கள்
இவர்கள்.

○ எம்மிடமிருப்பவை
முகிலைவிட உயரமான
நம்பிக்கைகளும்
பனையைவிட வலிமையான
நெஞ்சுறுதியும்

○ பயணத்திற்கு மாட்டு
வண்டிகள்
படிப்பதற்கு சிக்கனவிளக்குள்
வெளிர் ஒளியை மட்டுமல்ல
வானோசையைக் கூடத்தரும்
சைக்கிள் டைனமோக்கள்

○ தேசத்தின் வாழ்நாளுக்காக
தேகத்தின் ஆயுளை
இழந்திடும் ......
இவர்கள் கல்லறை
களிலிருந்து
கடன்வாங்கப்பட்டது
எங்கள் வாழ்க்கை.

○ அலறல்கள் கூட
அலங்காரமானது
பைந்தமிழைச் சுமந்து
கொண்டதால்
வார்த்தைகள் கூட
கவிதைப் பூக்களாகின
கன்னித்தமிழை மணந்து
கொண்டதால்.

சிவதாஸ்

# மகுடி

## கேள்வி - பதில்கள்



**சுகந்தி குணரத்தினம்** — யாழ்ப்பாணம்

☐ தமது வீட்டுக் குப்பைகளை ரோட்டில் கொட்டி விட்டு வீட்டை அழகாக வைத்திருப்பவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

△ தூளிகா மஞ்சத்தில் துயில் கொண்டாலும் ரோட்டு வாடை வீட்டிற்குள் வீசுமல்லவா?

(பரிசுக் கேள்வி வழங்குபவர்; மில்க்வைற் அதிபர் க.கனகராசா ஜே.பி)

**தீ.ஜெகன்** — கொடிகாமம்

☐ மனம் எப்படிப்பட்டது?

△ தெய்வம் போன்றது. படைத்தல், காத்தல், அழித்தல் எனும் சக்தியைக் கொண்டது.

**பொன் மாணிக்கம்** — மீசாலை

☐ பொறாமை பற்றி உங்கள் விளக்கம்

△ தன்னைத்தானே சித்திரவதை செய்யும் துன்பியல் முயற்சி.

**குமுதினி தவராசா** — சாவகச்சேரி

☐ சீதனக் கொடுமை பற்றி மேடையில் முழங்குகிறவர்கள் பற்றி உமது கருத்து

△ மேடையில் அரியின் கர்ச்சனை வாழ்க்கையில் நரியின் ஊளை.

**க.அரவிந்தன்** — நல்லூர்

☐ "Truth is Beauty" என்று கீட்ஸ் கூறுகிறாரே

△ அதன் மேலாக "காருண்யமே லாவண்யம்" என காஞ்சி பெரியவர் கூறுகின்றாரே

**மு.தனம்** — பளை

☐ மனம் அலையுதே?

△ மனம் பாதரசமாயிருக்கக் கூடாது. நங்கூரமாக இருக்க வேண்டும்.

**தி.ஞானசுந்தரம்** — அக்கராயன் மகாவித்தியாலயம்

☐ இன்றைய காலகட்டத்தில் பங்கீட்டடிப்படையில் தரும் மண்ணெண்ணையில் வீடியோ படம் பார்க்கலாமா?

△ பங்கீட்டு மண்ணெண்ணையில் உல்லாசப் படகோடும் பாதகர்கள்.

**க.திருமால்** — சித்தன்கேணி

☐ குயிலின் குரல் இனிமையாக இருப்பதற்குக் காரணம் என்ன?

△ காலையில் எழுந்தவுடன் சாதகம் பண்ணுகிறது.

**கு.கனகநாதன்** — புலோலி

☐ மதப்பிரச்சாரம் பற்றி உமது கருத்து?

△ தலைவலி மாத்திரைக்கு தானே விளம்பரம் தேவை.

**ம.ஞானம்** — கரவெட்டி

☐ குடிகாரர் கெட்டவார்த்தை உமிழ்வது ஏன்?

△ சாராயச் சகதியில் செந்தாமரை மலருமா?

**க.வேணு** — மல்லாகம்

☐ வருங்கால சந்ததிக்கு நாம் கொடுக்கும் செல்வம் எது?

△ பகுத்தறிவுப் புதையல்

**ச.சிவசோதி** — உடுப்பிட்டி

☐ பெற்ற பிள்ளைகளைப்பற்றி?

△ உயிரோடு இருக்கும்போது அந்நியப்பட்டு

இருந்துவிட்டு மறைந்த பின்ஆடியமாவாசை, சித்திரா பறுவம் அனுஷ்ட்டிப்பார்கள்.

மகுடியாரிடமிருந்து தங்கள் சந்தேகங்களைத் தீர்க்க விரும்புவோர் கேள்விகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

மகுடி பதில்கள்,
சிரித்திரன்,
550, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

க.தமிழ்ச்செல்வன் கிளிநொச்சி

☐ சிங்களமும் தமிழும் இணையுமா?

△ அநுரா, சிறிமா இணையாதபோது தமிழும் சிங்களமும் எப்படி இணையும்?

தேவகி கரவெட்டி

☐ தற்போதிருக்கும் ஜனாதிபதி விஜயதுங்க ஆட்சி நிலைபற்றி நீங்கள் என்ன நிலைக்கிறீர்கள்?

△ இப்போதான் கச்சேரி ஆரம்பமாயிருக்கு உருப்படிகள் முடியச் சொல்கிறேன்.

ம.மயூரன் சுன்னாகம்

☐ பொன்னான பொன்மொழி கூறும்?

△ தெய்வம் எங்கும் இருக்கமுடியாது என்பதனால்தான் தாய் எங்கும் படைக்கப்பட்டிருக்கிறாள்.

சி.கரன் கரவெட்டி

☐ இளம் பெண், ஆண்களின் தற்கொலைபற்றி என்ன நினைக்கிறீர்?

△ தன் இரக்கம் தற்கொலையில்தான் முடியும்.

கு.குணதாசன் அல்வாய்

☐ அந்தக் காலக் காதலுக்கும் இந்தக் காலக் காதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

△ அன்று விகிதபாராயணம் இன்று நேர்முகப் பரீட்சை

தி.ஞானசுந்தரம் அக்கராயன் மகாவித்தியாலயம்

☐ கணவன் மனைவிக்கு அடிமையாகலாமா?

△ சுதந்திர முட்டாளைவிட மனைவியின் அன்பிற்கு அடிமையாக இருப்பது மேலானது அல்லவா?

## சிரித்திரன் சிறுகதைப் போட்டி

வாசகர்களே!

சமூக நிகழ்வுகளைச் சித்தரிக்கும் சித்திரமாக உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

போட்டிக்குரிய பரிசுத் தொகையை இணுவில் நாதஸ்வர இசை மேதை **(N. R. கோவிந்தசாமி அவர்களின் புதல்வர்கள்)** வழங்குகின்றார்கள்

## Mrs. டாமோடிரன்



Mr. டா:- டார்லிங்!


Mrs. டா:- யேஸ் டார்லிங்!

Mr. டா:- நீங்களுக்கு கர்நாட்டிக் ராகம்ஸ் தெரியுமா?

Mrs. டா:- தெரியும். தோடி, பையிரவி, சன்னியாசி கனடா.

Mr. டா:- எக்சலன்ட், மார்வலஸ், வண்டர்புல்.

# மெயில் வாகனத்தார் மனோரதம்.



மனோரதம் பின் நோக்கி பண்ணைப் பாலம் சென்றது. 'பலேபலே வாங்க...... நல்ல நல்ல ஆளைத்தான் சந்தித்தேன்' என்று என்னை அழைத்தது யார் தெரியுமா? வேறு யாருமில்லை. எங்க ஈழநாட்டு ஆசிரியர் ஹரன் அவர்களே தான். நீங்க தினம் பண்ணைப் பாலப் பக்கம் வந்தாலென்ன? இங்கு வீசுவது சாமானிய காற்று இல்லை..... மூலிகைக்காற்று பாருங்க தீவுமரம்; செடி; கொடியெல்லாம் தாண்டி கடல் எல்லாம் தாண்டி வந்து வீசுகிற காற்று என்று சொன்னார். சொன்னதும் என் மனோரதம் முன் நான் என்றோ வாசித்த புத்தகத்தின் முன்னுரை ஞாபகம் வந்தது. பழையபடி மனோரதம் ஹரன் ஐயா முன் வந்து நின்றது. 'நீங்கள் மூலிகைக்காற்று என்றதும் மூலிகை பற்றிய புத்தகத்தின் முன்னுரை நினைவில் வந்தது. சொல்லட்டுமா' என்றேன். பேஷ்ஷா சொல்லுங்களேன் என்றார். சொன்னேன். ஒரு புதை பொருள் ஆராய்ச்சியாளர் தெலுங்கு மாநிலத்திற்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் தாகம் எடுக்கவே தனது வாகனத்தை சாலை ஓரம் நிறுத்திவிட்டு அங்கு இளநீர் விற்கும் பெண்ணை அணுகி ஒரு இளநீர் தரும்படி கேட்டார். பெண் மகனைப் பார்த்து இளநீர் சீவிக் கொடுக்கும்படி கூறினாள். மகன் இளநீர் சீவும் பொழுது தன் விரலையும் சீவி விட்டான். தாய் உடன் ஓடிப் போய் ஒரு இலை பறித்து வந்து தன் மகன் சீவிய விரலைப் பொருத்திக் கட்டினாள். ஆராய்ச்சியாளர் இதைப் பார்த்துவிட்டு, 'அம்மா ஏற்பு வரும் மகனை என்னுடன் விடுங்க நான் வைத்தியசாலை கொண்டுபோய் மருந்து கட்டி ஊசி ஏற்றிக் கொண்டு வருகிறேன்' என்றார். அதற்குப் பெண் வேறு விரலை இழுத்துக் காட்டி 'சாமி இந்த விரலும் இப்படித்தான் துண்டாக வெட்டுப்பட்டது, இலைதான் இணையப் பண்ணியது' என்றாள். ஆராய்ச்சியாளர் யாதும் பேசத் தெரியாது வாயடைத்து நின்றார். பின்பு ஆராய்ச்சியாளர் 'புதைந்து கிடக்கும் கற்சிலைகளை ஆராய்ச்சி பண்ணி என்ன பயன்? நான் இனி மூலிகைகளை ஆராய்ந்து மனிதனைக் காப்பாற்றப் போகிறேன்' என்று கூறி வாகனத்தைத் திருப்பினார். ஜோராயிருக்கே நீங்க கூறிய முன்னுரை என்றார். மனோரதம் திடீரென கொழும்பு சென்றது. அன்று நான் கொழும்பில் இருந்த போது கந்தோர் முடிந்தவுடன் நண்பன் ஹமீட் இன் பட்டு மாளிகைக்குச் செல்வது வழக்கம். உடன் அவர் ஒரு நன்னாரி போட்ட 'ப்பிளெயின் டீ' அழைப்பித்துத் தருவார். அதை நான் பருகிய வண்ணம் 'யாழ்ப்பாணத்திற்குள் மதில் புகுந்து வேலி எல்லாவற்றையும் காலி பண்ணியிட்டுது. அன்று வேலியெல்லாம் மூலிகைச் செடி படர்ந்தது' என்றேன். அதற்கு ஹமீட் அவர்கள், 'ஏன் 'அன்று நன்னாரி 'சர்பத்' கூட இருந்தது. நன்னாரி சூட்டு நோய்க்கு சிறந்த மூலிகை. இன்று நன்னாரி என்ற சொல் மக்கள் நாவில் இல்லையே' என்று நொந்துகொண்டார்.

# கவிஞனின் மகள்

**ஈழமுத்து**

அப்பாவிற்கு எச்ஸ்ட்ரே கண்கள்தான். கவிஞர்கள் எல்லோருக்குமே இப்படித்தான் ஊடுருவுங் கண்களோ? இல்லாவிட்டால் வீரகேசரி வார மலருக்குள் மூழ்கியிருந்தவர் எப்படித்தான் அவள் வந்ததைக் கண்டு கொண்டிருப்பார்?

விறாந்தையில் அப்பாவைக் கண்டதும் முன்னெச்சரிக்கையாக சத்தம் கேட்காதவாறு கேற்றைத் திறந்து மெதுவாக சைக்கிளை உருட்டி வந்தவள் அப்பாவின் செருமலைக் கேட்டதும் விறைத்துப் போனாள்- ஆம், அந்தச் செருமலில் "நீ வந்திருப்பது எனக்குத் தெரியம்" என்ற அறிவிப்பும், "இவ்வளவு நேரமும் எங்கே போட்டு வாறாய்" என்ற கண்டிப்பும், 'இணைக்கு உன்னோடை பிரச்சினையிருக்கு" என்ற எச்சரிக்கையும் கலந்திருந்தது.

தலையை மெல்லநிமிர்த்தி 'இந்த மனுசன் எப்ப வந்தது?' என்ற கேள்விக்குறியுடன் அப்பாவைப் பார்த்தாள். அவர் ஒன்றும் தெரியாதவர் போல் தொடர்ந்தும் பத்திரிகைக்குள்ளேயே மூழ்கியிருந்தார்.

பின்பக்க 'கராச்சில்' சைக்கிளை விட்டுவிட்டு சமையலறைக் கதவால் உள்ளே நுழைந்தாள் சுமதி. சமையலறைக்குள் மா அரித்துக் கொண்டிருந்த அம்மா அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு தனது வேலையில் தொடர்ந்து மௌனித்தாள். அம்மா ஒரு அஹிம்சைவாதி, வாயில்லாப் பூச்சி என்பது சுமதிக்குத்தெரிந்ததுதானே.

உடையை மாற்றிக்கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள். மேற்கு வானில் கதிரவன் குருதி சிந்தி போராடிக்கொண்டிருந்தான்...... நாளைய விடிவிற்காக. அந்தக் காட்சியில் ஒன்றிப் போனவள் "செவ்வானம் சிவந்தது ஏன் ......" என்ற பாட்டை முணுமுணுத்தபோது பதட்டம் சற்றுக் குறைந்தமாதிரியிருந்தது.

அவள் பெரிய தவறொன்றையும் செய்யவில்லை என்றாலும் அப்பாவை நினைக்க சற்றுப் பயமாகத்தான் இருந்தது. அப்படி என்னதான் அவள் செய்துவிட்டாள்? வீட்டில் சொல்லிக் கொள்ளாமல் எங்குதான் போய்விட்டு வருகிறாள்?

---

சிரித்திரன் சிறுகதைப் போட்டியில் முதலாமிடம் பெற்ற சிறுகதை

---

காதலனை சந்திக்கவா - சென்றாள்? இல்லையே எங்களுக்காக காயமடைந்து ஊனமுற்றிருக்கும் அந்தபோராளிகளைப் பராமரிக்கத்தானே போனாள். அது பெரிய தப்பா? அப்பாவின் பார்வைக்குள் ஒரு வேளை தப்பாக இருக்குமோ?

இல்லையில்லை அப்பாகூட போராளிகள் வந்து கேட்கும் போது மாவீரர்களை புகழ்ந்து கவிதை எழுதிக் கொடுப்பவர் தானே. "ஏன் மாஸ்ரர் உங்கடை பேரையும் கீழே போடுங்கோவேன்" என்று கேட்கும் போது "இல்லைத்தம்பி ..... இது புனிதமான காரியம். இதுக்கை என்ர பேரையேன் இழுக்கிறியள், அது கிடக்கட்டும். நீங்க கவிதையை மட்டும் போடுங்கோ" என்று பெருந்தன்மையோடு கூறும் அப்பாவைக் கண்டு அவளே பெருமைப்பட்டிருக்கிறாள் அப்பிடிக்கொத்தவரா அவளின் செய்கையை கண்டிக்கப்போகிறார். இருந்தும் சுமதிக்கு உள்ளூர ஒரு பயம் இருந்ததில் நியாயமிருக்கத்தான் செய்தது.

உள்ளே சென்று குப்பிவிளக்கில் படிக்கத் தொடங்கிய போதுதான் வெளியே அப்பா கதவை அறைந்து சாத்துவது கேட்டது. இது போருக்கு அறைகூவலோ? "சுமதி...... சுமதி இஞ்சவா", "என்ன" என்றவாறு அவர் முன் பிரசன்னமானாள். "பொழுது படுமட்டும் எங்கே நிண்டிட்டு வாறாய்?" "உதிலை சாரதா வீட்டதான் ... இருந்து படிச்சிட்டு ......" "பொய் சொல்லாதை. எனக்கு கெட்ட கோவம் வரும்" அப்பா உறுக்கினார். "......" சுமதி மௌனமானாள். "எனக்கு எல்லாந் தெரியுமடி இப்ப கொஞ்ச நாளா நீ எங்க திரியிறாய் எண்டுந் தெரியும். ஒரேயொரு பிள்ளையெண்டு செல்லங் கொடுத்தா நீ ......"

'அப்பாவிற்கு எப்படித் தெரிஞ்சுது. யாராவது ஆசுபத்திரியில் கண்டுவிட்டு சொல்லியிருப்பார்களோ?' என்ற கேள்விக்குறியுடன் சுமதி நிற்க. அப்பாவின் அர்ச்சனைகள் தொடர்ந்தது."நீ மாவீரர்தினம், மகளிர் தினம் எண்டு திரியக் குளையே நினைச்சனான். இப்ப போராளியளை பராமரிக்கிற

அளவுக்கு நீ வளர்ந்திட்டாய். ச்சீ ...... இப்ப ஊரெல்லாம் கதையாப் போச்சு, இப்பிடி நீ கட்டாக்காலியா திரிஞ்சா நாளைக்கு எந்த ஆம்பிளை உன்னைக் கட்டுவான்.'' ''அப்பா......'' ''இல்லை நாளைக்கு ஆபிவந்தாத்தான் என்ன செய்வாய். அளவெட்டி வரைக்கும் வந்தவனுக்கு இஞ்சால வாறத்துக்கு இன்னும் கனகாலமே எடுக்கும். நாங்க என்னண்டா தாமரையிலையும் தண்ணியும் மாதிரி எங்கட நழுவிறதெண்டு பார்க்கிறோம். நீயோ கெடுகிறேன் பந்தயம் பிடி எண்டு நிக்கிறாய். இனி நீஒரிடமும் வெளிக்கிடக்கூடாது. உனக்கொரு முடிவெடுத்திட்டுத்தான் இனி மற்றவேலை''

அப்பா சொன்னதை செயலிலும் காட்டத் தொடங்கிவிட்டார். சுமதிக்கு கடுங்காவல் தண்டனை விதித்த அதே நேரம் அவளுக்கு ஒரு கால்கட்டும் போட்டு கனடாவிற்கு பார்சலாக அனுப்ப அவர் தீர்மானித்துவிட்டார்.

வெளிநாட்டுச் சம்மந்திகள் அடிக்கடி வீட்டிற்கு வந்து போகத் தொடங்கினர். ''எங்களுக்கு பொம்பிளை அழகாயும, குணமாயும் இருந்தால் போதும். சீதனம் வேண்டாம். உங்கடை மகளிட்டை அது இரண்டும் இருக்கு. பெடியன் படத்தை பார்த்தவுடனே பொம்பிளையை அனுப்பெண்டு நிக்கிறான். நாங்க சீதனம் ஒரு சதமும் எதிர்பார்க்கையில்லை. அனுப்பிறசெலவைமட்டும் .. ..'' அவர்களின் பசப்பு வார்த்தைகளில் அப்பாவும், அம்மாவும் சுக்களாக ஒட்டிக் கொண்டார்கள். அடுத்து பாஸ் எடுக்கும் படலமும் ஆரம்பமாகிவிட்டது.

ஆனால் சுமதி ஒன்றும் பேசவில்லை. அவளுக்கு சிந்திப்பதற்கு நேரந்தேவைப்பட்டது. அவள் சிந்தித்தாள். இன்னும் ஆழமாக சிந்தித்தாள் புரியாத பல விடயங்கள் இப்போ புரியத் தொடங்கியது அப்பாவின் இரட்டைவேடமும் புலப்படத் தொடங்கியது.

அப்பா கவிதைகளில் தன் பெயரை போடாமல் விடுவதற்கும், அவசியம் என்றால் புனை பெயரில் தன்னை உருமறைத்துக் கொள்வதறகும் காரணம் எதுவென்று அவளுக்கு விளங்கியது. ஆம் அப்பாவிற்கு உத்தியோக பூர்வமாக கொழும்பு செல்லவேண்டிய தேவைகள் இருக்கின்றன. அதை விட அண்மையில் அவரது படைப்புக்கு சாகித்திய மண்டல பரிசுகூட கிடைத்திருக்கிறது. அதறகாகவும் அவர் கொழும்பு செல்ல வேண்டியிருக்கும். எனவே போராட்டத்துடன் தனது பெயர் இணைக்கப்படுவது தனக்கு ஆபத்தானது என அப்பா நினைக்கிறார். அதனால் இரட்டை வேடமபோடுகிறார். இது அவரது கொழும்பு பயணத்திற்கு சாதகமாக உள்ளது.

அத்துடன் இம்முறை கொழும்பு செல்லும்போது சுமதியையும் அழைத்துச சென்று அவளின் கலியாண அலுவலை முடிக்க முயல்வதும் சுமதிக்குப் புரிந்தது. ஆனால் மண்ணை மறந்து, கண்ணுக்கெட்டாத கனடாவில் வாழும் மணவாளனுக்கு, கண்ணை மூடிக் கொண்டு தன்னைப்படைக்க, அவள் தயாராகவில்லை. ஆம். அவள் ஒரு முடிவெடுத்து விட்டாள். அவளது முடிவு அப்பாவை தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையை கண்ட தமிழ் கட்சிகளின் நிலையில் கொண்டுபோய்விட்டது. கவிஞர் உண்மையிலேயே இடிந்து போனார். அவர் எதிர்பார்க்காத ஒன்று நடந்து முடிந்து விட்டது.

□ □ □

'ணொங்' என்ற சத்தத்துடன் மேசையில் வைக்கப்பட்ட 'ரீ' அப்பாவின் சிந்தனையைக் கலைத்தது. முக்கால் பங்கு 'ரீ' யும் கால்பங்கு நுரையும் சேர்ந்த சீனி தூவப்படட அந்தக் கலவையை அவசர அவசரமாக உறிஞ்சிவிட்டு அந்த ''கேநீர்'' கடையை விட்டு வெளியேறினார். சைக்கிளை எடுத்து ரவுனை நோக்கி உழக்கத் தொடங்கினார்.

வெய்யில் வர வர ஏறிக் கொண்டிருந்தது. அனல் பறக்கும் அந்த வெய்யிலில், தூரத்தே கானல் நீர்போன்று புகார் தோன்றுவதை காணக் கூடியதாக இருந்தது. ஆனல் மனிதசக்கரம் இதனால் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. வீதியோர பற்றையொன்றில் விறகுசுள்ளி பொறுக்கும் ஏழைச் சிறுமிகளும். முதியவரை சுமந்து செல்லும் ரிச்சோ இளசுகளும், சைக்கிளில் விறகு சுமக்கும் வியாபாரிகளும் ....தொடர்ந்து இயங்கியபடிதான்.

அப்பா சைக்கிளை வேகமாக்கினார். இந்தச்சனிபிடிச்ச வெய்யிலைக் கடந்துவிடவேண்டும் என்ற நோக்குடன். முன்னால் தொழுவியிருந்த பையில் ஒரு காகிதச்சுருள் படபடத்துக் கொண்டிருந்தது. இல்லை யில்லை ஒரு கல்யாணச்சுருள் படபடத்துக் கொண்டிருந்தது. ஆம், அது ஒரு திருமண வாழ்த்து அவரது நண்பர் ஒருவரின் மகளுக்கு நாளை மறுதினம் திரும



ஒருவர்:- அந்நிய நாட்டினை சொந்தமிருக் கெண்டு பேப்பரில் போட்டுக் காட்டுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறியள்?

மற்றவர்:- அண்ணன் அத்தான் அகதிகளென்று சொல்லிக் காட்டும் வெள்ளைமனம்.

# காத்திருப்பு

– வளவை வளவன் –

நந்தவனத்தில்
நறுமலர் வீசும்
சுந்தர நினைவுகளோடு
பிறந்தவர் நாங்கள்......

வாழ்க்கை வனத்தில்
சீதன இராவணர்களால்
சிறையிருக்கின்றோம்.

வசந்தத்தேரில்
கொலுவரும் வேளை
வாடிக் கிடக்கிறோம்
வயதுகள் ஏற.

அந்நிய நாட்டின் கூலிகளாக
சென்று திரும்பியோர்
கெடுபிடியாலே
மடங்குக் கணக்கில்
ஏறுது றேட்டு......

மாரீச மான்களை
பொன் மானென்று
வாங்க நினைக்கும் சீதை
களோடு

எதிர் நிற்க முடியாது
வறுமைக் குகையுள்
சிறையிருக்கின்றோம்.

சீதனராவணர்களைப்
புறம் காணவைக்கும்
இராமர் தம் வருகைக்காகக்
காத்திருக்கின்றோம்......

எமக்கு வேண்டியது
இராம பாணமே அல்ல
இராம இராச்சியமே.

ணம். அந்த நண்பர் அப்பாவுக்கு மிகவும் வேண்டியவர். அப்பாவுக்கு சாகித்திய மண்டல பரிசு கிடைக்கச்செய்ததில் அந்த நண்பருக்கும் ஒரு பெரிய பங்குண்டு. அதனால்தான் அப்பா எவ்வளவோ கஸ்ரப்பட்டு சொற்களைக்கோர்த்து அந்த திருமண வாழ்த்தை எழுதி முடித்திருந்தார் இப்போது ரவுனுக்குப் போவதும் அதற்கு நல்ல ஒரு கண்ணாடி பிறேம் போடுவதற்காகத்தான். அப்பாவின் சைக்கிள் ரவுனின் எல்லையைத்தொட்டது இனனும் பத்து நிமிடத்தில் கடையை அடைத்துவிடலாம். அப்போ பாடசாலை விட்டு சாரி சாரியாக வந்த மாணவிகள் அப்பாவின் பயணத்தை தாமதிக்கச் செய்தனர். சிரித்துக் கும்மாளமிட்டபடி வந்த அந்த மாணவிகளின் கள்ளமில்லா முகங்கள் அப்பா மறந்துவிட நினைத்த ஏதோ ஒன்றை ஞாபகப்படுத்தின. அவரது உடல் முன்னோக்கி இயங்க, உள்ளம் பின்னோக்கி இயங்கத்தொடங்கியது.

□ □ □

ஆம் அடுத்து வந்த ஒரு இரவிலேயே சுமதி இயக்கத்துக்குப் போய்விட்டாள். அப்பா ஓடினார், தேடினார் ஆனால் அவளைக் காணவேயில்லை. ஒரு துண்டு கூட எழுதி வைக்காமல் போய்விட்டாள்

அம்மா பாவம் "உங்களாலை தான் அவள் போகவேண்டி வந்தது" என்று சொல்லக் கூட தைரியமற்று வழமையான அஹிம்சைரீதியிலான உண்ணா விரதப் போராட்டத்தையே ஆரம்பித்து விட்டாள். அப்பா எப்படியோ ஓடியாடி சுமதியைக் கண்டுபிடித்துவிட்டார். வடமராட்சியின் மூலையில் உள்ள பயிறசி முகாம் ஒன்றில் அவள் இருந்தாள். அம்மாவுடன் அந்த முகாமை முற்றுகையிட்டார். சுமதி வந்தாள், சீருடையில் நல்ல எடுப்பாகத் தானிருந்தாள், அப்பா முகத்தைச் சுழித்துக் கொண்டார்.

அம்மா அவளைக் கட்டி அழத் தொடங்கினாள். சுமதி குனிந்த தலை நிமிராமல் நின்றாள். தன் காதுகளுக்கு, கட்டாய வேலை நிறுத்தம் கொடுத்துவிட்டு இன்னும் இறுக்கமாக நின்றாள்.

அப்பா வழமையான பீடிகை யுடனேயே பேசத்தொடங்கினார். "ஏன் சுமதி உனக்கு என்ன குறை விட்டனாங்கள். அம்மாவுக்குக் கூடச் சொல்லாமல் வெளிக்கிட்டிட்டியே. நீ ஆசுப்பத்திரிக்குப் போறதிற்குப் பேசினனான்தான். ஆனா அது எதுக்கெண்டு உனக்குத் தெரியுமே. எல்லாம் உன்ரை நன்மைக்குத்தானே. ஒரு கொஞ்சக் காலத்துக்கு உதுகளை மறந்து ஒழுங்காப் படிச்சா பிறகு ஒரு டொக்ரரா வந்து நீ நினைச்சதை செய்யலாந்தானே"

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்ற நப்பிக்கையுடன் அப்பா எவ்வளவோ கதைத்தார், ஆனால் அவள் தான் கல்லிலும் இறுக்கமான கரும்புலியாக நின்றாள். பாசறைக்குள் வந்து விட்டால் எல்லோருக்குமே இப்படியொரு வைராக்கியம் பிறந்து விடுகிறதோ?

அவளை உலுக்கி "சுமதி இப்பமட்டும் எங்களோடை வா...... நான் உன்னை கொழும்புக்கனுப்பி படிப்பிக்கிறேன்...... சோதினையை எடுத்திட்டு வந்து, நீ என்னத்தையும்......" அப்பா முடிப்பதற்குள் சுமதி அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டாள். அம்மாதான் அழுதாள். இப்பொழுதெல்லாம் அவள் அழு

---

முரளி:– நீ குண்டுக்குப் பயம் இல்லையா?

கண்ணன்:– குண்டுக்குப் பயமில்லை, குண்டு போடுற விமானம் தலையில் கழண்டு விழுந்து போமென்றுதான் பயம்

அதிமதுரம்

வதற்கு மட்டுந்தான் வாயைத் திறக்கிறாள். அவளது மொழியே அதுதானே, அப்பாவின் அரை மணி நேர பேச்சைவிட அம்மாவின் அழுகையே அவளை ஒரு கணம் பாதித்தது.

திடீரென நின்றவள், கண்களை மூடிக்கொண்டாள். நிதானித்தாள். ''அப்பாவின் சொல்லுக்கு எடுபட்டு, அவளும் நாளை ''அம்மாவைப்'' போல் ஒரு அபலையாகக் கூடாது'' என்ற எண்ணத்தில் திரும்பிப் பார்க்காமல் தொடர்ந்து நடந்தாள். அவளது நடை உறுதியாகவிருந்தது, அப்பா ஏமாற்றத்துடன் திரும்பினார். ஆனால் விட்டுவிடவில்லை. அவளை வெளியே எடுக்க பல முயற்சிகள் செய்தார். ஆனால் அவள்தான் அப்பாவைச் சந்திக்க மறுத்துவிட்டாள். அடுத்தமுறை அவர் வந்த போது அவளுக்குப் பதிலாக ஒரு கடிதமே அவரைச் சந்தித்தது.

அன்புள்ள அம்மா, அப்பா அறிவது!

தயவுசெய்து என்னைச் சந்திக்க முயலவேண்டாம். நான் போராடுவதென்று என்றோ முடிவெடுத்துவிட்டேன். இனி அதிலிருந்து எள்ளளவும் விலகப் போவதுமில்லை. அப்பா, இப்போ என்னால் சுயமாகச் சிந்திக்க முடியும். உங்கள் முன்னின்று நேரில் பேச முடியாத வற்றை இங்கு எழுதுகிறேன்.

ஒரு கவிஞரின் மகள் என்ற விதத்தில் நான் பலசமயம் பெருமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அன்று நீங்கள் ஒரு இரட்டை வேடதாரி என்று அறிந்தபோது, உண்மையிலேயே உடைந்துதான் போனேன்.

போருக்குப் பயந்து தன் கைகளுக்கு விலங்கிட்டுக்கொண்ட ஒரு கவிஞனுக்கு மகளாகப் பிறந்ததற்கு நான் வெட்கப்படுகிறேன். போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் கலைப்படைப்புக்களின் காலத் தேவையைப்புரிந்துகொள்ள முடியாது கல்வெட்டுப் பாடித்திரியும் நீங்கள் சன்மானங்களுக்கு ஆசைப்பட்ட ஒரு சுயநலவாதியே. இன்று போராட்டத்தை ஒதுக்கி வைத்துவிட்டு காதலையும், கன்னியையும் கவியரங்குகளில் ஏற்றி முழங்கும் நீங்கள், நாளை ஈழங்கிடைத்ததும் சுதந்திரப் பள்ளுப் பாடுவீர்கள்.

இறுதியாக ஒரேயொரு எதிர்பார்ப்புடன் இந்தக் கடிதத்தை முடிக்கிறேன். தயவு செய்து உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். இந்த மண்ணையும், மைந்தர்களையும், அவர்களின் தற்கொடைகளையும் பாடுங்கள். பயிரை மேயும் மாற்றானின் வேலிக்கெதிராக அணிதிரட்ட, உங்கள் சிந்தனைக் கொடியை சொந்த மண்ணில் படரவிடுங்கள். இல்லையேல் நாளை கூட ஒரு மாவீரருக்கு பெற்றோராகும் தகுதியை நீங்கள் இழந்துவிடுவீர்கள்.

அன்புடன்
தமிழினி (சுமதி)


அப்பா அந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்தார். இப்போது தெரிவுக் குழுவின் இறுதி தீர்மானத்தையும தெரிந்துவிட்ட தமிழ்குழுக்களின் நிலையில் அவர் இருந்தார். ''இனி அவள் எனக்கு மகளுமில்லை. நான் அவளுக்கு தேப்பனுமில்லை.'' அப்பா அவளை மறந்துவிடத்தான் முயற்சித்தார். ஆனால் முடியவில்லை. சீருடை தரித்த சுமதி அடிக்கடி அவர் மனதில் தோன்றி எதையோ சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தாள்.

□ □ □

உறுமியபடி வந்த வாகனமொன்று பொருளாதாரத் தடையால் விட்ட கொட்டாவிப் புகை மூக்கிற்குள் நுழைந்து நுரையீரலை தொட்ட போதுதான் அப்பாவின் சிந்தனை கலைந்தது. தான் தேடி வந்த கடையையுந்தாண்டி சிறிது தூரம் வந்துவிட்டதை அறிந்தவர் தன் சிந்தனையோட்டத்தின் நீளத்தை எண்ணி தனக்குள்ளேயே தலைகுனிந்து கொண்டார்.

சைக்கிளை திருப்பி அந்தக் கடையை அடைந்தவர் திருமண வாழ்த்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்டார். ''இன்னும் அரை மணித்தியாலத்தாலை வாங்கோ போட்டுவைக்கிறோம்'' என்ற கடைக்காரரிடம் ''பரவாயில்லை நான் நிக்கிறன், போட்டுத் தாங்கோ'' என்றார். அங்கு நின்ற வேலையாள் ஒருவன் 'பிறேம்' போடுவதற்குரிய சட்டங்களை எடுத்துக்கொண்டு பின்பக்கம் சென்றான். அப்பா அங்கிருந்த கதிரையொன்றில் அமர்ந்துகொண்டார். சுவரில் தொங்கிய விதம் விதமான படங்கள் வெவ்வேறு கோணங்களில் உலகை படம் பிடித்துக் காட்டிக்கொண்டிருந்தன.

அப்போதுதான் நெற்றியில் வழிந்த வியர்வையைப் புறங்கையால் துடைத்தபடி அந்த இரு பெண்களும் உள்ளே நுழைந்தனர். சீருடை தரித்த இருவரது கரங்களிலும் துப்பாக்கிகள்.



ஒருவர்:- என்ன செய்தி?
மற்றவர்:- யு. என். பி. அரசு வடக்கு - கிழக்கு இணைப்பை விரும்புதில்லை. அதனால் தான் காமினியை இணைத்துக் கொள்ளவும்விரும்புதில்லை.

ஜோக்கிறற்றிஸ்

கைத்தொழில் புரட்சியின் இன்றைய களம்?
மேஜர் ரஞ்சன் கைத்தொழிலகம்,
அப்ப புரட்சிக்குப் பெயர் போன இடமென்கிறியள்



உலோகங்களின் உற்பத்திமையம்.

நயமான நாணயமான
வலிமையாக வடிவமைந்த
லாண்ட் மாஸ்டர் பெட்டிகள்.

இதர இரும்பு உற்பத்திப் பொருட்களுக்கு,

# மேஜர் ரஞ்சன் கைத்தொழிலகம்.

வட்டுக்கோட்டை சித்தங்கேணி.

இரட்டையாக பின்னப்பட்ட தலைமயிர் மடித்துக்கட்டப்பட்டிருந்தது. அவர்களில் ஒருத்தியின் கையில் ஒரு படச்சுருள். அவர்கள் அந்தக் கடைக்காரரை அணுகினார்கள்.

அந்தப் பெண்கள் தனது வேலையைத் தாமதிக்கச் செய்துவிடுவார்கள் என்ற எண்ணத்தினாலோ அல்லது அந்தப் பால் மணம்மாறாத பிஞ்சுகள் எதையோ ஞாபகப்படுத்தி அவரைச்சங்கடப்படுத்துவதனாலோ அப்பாவால் தொடர்ந்தும் அங்கு இருப்புக்கொள்ள முடியவில்லை. எழுந்து பின்பக்கமாகச் சென்று சட்டங்களைப் பொருத்திக் கொண்டிருக்கும் வேலையாளுக்கருகில் நின்று கொண்டார்.

கடைக்காரர் அவர்கள் கொடுத்த படச்சுருளை வேண்டிக்கொண்டு பின் பக்கத்திற்கு வர அவர்களும் பின்னால் வந்தார்கள். ஒரு 'ரேப்பை' எடுத்து அந்தப் படத்தை அளந்து விட்டு ''ஒரு முன்னூறு ரூபாய் வரும்'' என்றார். அவ்வளவு பெரிய தொகையைக் கேட்ட அந்தச் சிறிய கண்கள், ஆச்சரியத்தால் விரிந்தன. ''ஏனண்ணை நூறு நூற்றம்பதுக்கை செய்யேலாதே", ''அப்பிடியெண்டா வெட்டி அரைவாசியாத்தான் போடவேண்டி வரும்'' அந்தப் பெண்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். அந்தப் படத்தை வெட்டுவதை அவர்கள் விரும்பவில்லைப் போலும்.

அப்போதுதான் மேசையில் வைக்கப்பட்டிருந்த அந்தப் படத்தை அப்பா தற்செயலாகப் பார்த்தார். மூளையில் மின்னல் தாக்கியது. அது ஒரு வீரமரணமடைந்த பெண் போராளியின் படம் - கைகளில் எடுத்து உற்றுப் பார்த்தார் - அச்சொட்டாக சுமதியைப் போலவே சிகப்பாக ஒரு பெண் - புன்னகைத்தபடி - தீட்சண்யமான அவளது விழிகளில் இருந்து புறப்பட்ட ஏதோ ஒன்று அப்பாவின் இருதயத்தை ஊடுருவிச் செல்வது போலிருந்தது. அப்பா அடிபட்ட பாம்பு போலானார். செய்யக் கூடாத பெரிய தவறொன்றைச் செய்துவிட்டவர் போல் நிறைய வேர்த்தார்,

''தம்பி எனக்கு போட்ட அந்தப் 'பிறேமுக்கை' இந்தப் படத்தை போட்டுக் குடுங்கோ'' என்றவர், அந்தப் படத்தின் கீழ் எஞ்சியிருந்த கணிசமான வெள்ளைப்பகுதியில் புதிய சக்தியுடன் ஏதோ எழுதத் தொடங்கினார். அவர் எழுதிய வரிகள் உண்மையான ஒரு கவிஞனின் உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து எழுந்தவையென்பதை அறிந்தோ என்னவோ அதுவரை காற்றில் படபடத்துக்கொண்டிருந்த அந்தத் திருமண வாழ்த்து சுருண்டு அவருக்கு தலைவணங்கியது. கடைக்காரரும், அந்தப் போராளிப் பெண்களும் அப்பாவை ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

❋ முற்றும் ❋

*இச்சிறுகதை*

சமகாலம், சமூகச் சித்தரிப்பு, துடிப்பு மிக்க படைப்பு. இந்தச் சிந்தனைக்கு சிரித்திரனின் பாராட்டுகள்.


பெரியவர்: நான் தானியம் அரைப்பதற்கு உகந்த இடத்தை உரைப்பீரா?
மற்றவர் : ஐயனே கந்தரோடை செல்மின்

இருக்கிறது 'ஐங்கரன் கிறைன்டிங் மில்'

**உங்கள் தேவைக்கேற்ற சேவை.**

ஐங்கரன் கிறைன்டிங் மில்.
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சௌத்தியா வத்தை,
கந்தரோடை, சுன்னாகம்.

# சீலச்செல்வர் பிறீமன்

**1910ஐ அடுத்து கவர்மெண்ட் ஏசண்டராய், யாழ்ப்பாணம் கச்சேரியில் வசித்தவர் பிறீமன்.**

ஒரு நாள் செம்மணி வழியாய் அவர் பயணம் செய்தபோது, நெற்பயிர்கள் வாடிக் கருகுவதைக் கண்டார்! சகிக்க முடியவில்லை. நட்டநடு மத்தியானம்; நெருப்பு வெய்யில். பைசிக்கிளை ஓரிடத்தில் வைத்தார்; தொப்பி, சப்பாத்து இரண்டையுங் கழற்றினார்; வயல் ஒன்றின் மத்தியில் முழந்தாளில் நின்று ஆண்டவனை வேண்டினார்; வியர்வை பெருகி வழிந்தது; அவர் அசையவில்லை; கண்களில்நீர் பெருகியது. எங்கோ இருந்து முகில் ஒன்று எழுந்து, கறுத்து; மழை பொழிந்தது; தரும ஏசண்டுத்துரை தலை முழுகிச் சட்டையிலிருந்து நீர் பொழியத் தெருவுக்கு வந்தார், அந்த தெய்வ மனிதர். 'பெய்யெனப்' பெய்தது, மழை.

ஒரு நாள் இரவில் விளக்கின்றி வந்த ஒரு வண்டிக்காரன், கல்வியங் காட்டான். வண்டி வந்த போது வண்டியைக் குனிந்து பார்த்து வண்டி இலக்கத்தைப்பார்க்க முயன்றார், ஏசண்டுத்துரை. அப்போது மாடோட்டுந் தடியால் துரையின் முதுகில் மொத்து மொத்தென்று மொத்திவிட்டான். துரை ஒதுங்கி விட்டார். அவன் வீடு சென்ற பின், அவன் வீட்டைக் கண்டுபிடிக்க அடையாளம் செய்துவிட்டு, மறுநாள் பொலிசை அனுப்பினார். அவர் ஏசண்டு என்று அறிந்ததும் நடுங்கிக்கொண்டு அவர் முன் சென்றான். துரை அவனை நோக்கி 'நல்ல அடிகொடுத்தேன் என்று சொல்லிக்கொண்டு போ' என்றார்; அவர் செய்த தண்டனை அவ்வளவே. அவன் அக்கணமே வெண்ணெயாய்ப் போயினான், அவரை நினைந்து மனமுருகிக் கண்ணீர் வடித்துக்கொண்டே வீடு சென்றான்.

(16ஆம் பக்கம் பார்க்க)



ஒருவர்:- எனக்கு இந்த மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் பண்ணி நெஞ்சு நோதான் மிச்சம். டொக்டரிட்ட போறன்.

மற்றவர்:- டொக்டரிட்ட போறதை விட்டுட்டு உன்ர வாகனத்தை கொண்டுபோய் 'இரத்தினாஸ்' இல காட்டு.

**'இரத்தினாஸ்'**
**ஜெனாத்தன் வீதி,** (விக்ரோரியா வீதி)
**யாழ்ப்பாணம்.**

# வியர்வையின் வெற்றி

**'பிரம்மபுத்திரா'**



*''எவனெவன் சிறகுகளுக்கு எவ்வளவு வலுவுண்டோ
அவனவன் அவ்வளவு உயரம் பறந்தே தீர்வான்''*

— அமுதபாரதி

முன்னேற்றம் என்பது - எவர் அடைந்ததாக இருப்பினும் நாட்டின் தலைவரோ, விஞ்ஞானியோ, தத்துவவாதியோ, சிந்தனையாளரோ, சர்வாதிகாரியோ அவர்களின் கடின உழைப்பின் விளைபலனே அது.

அவர்களின் தூங்காத இரவுகள், ஊண் இல்லாத பொழுதுகளின் அறுவடையே. அவர்கள் மகானோ; சர்வாதிகாரியோ தமது வாழ்நாளில் 'தவம் இருப்பதுபோல்' இலட்சியத்துக்காக வருந்தி உழைத்தே பயனடைந்துள்ளார்கள்.

கடற்கரைக்குக் காற்று வாங்கச் செல்லாமல் சிந்திக்கச் சென்றவர்களே உலக சாதனைப் பட்டியலில் இடம் பிடித்துள்ளார்கள். தமது இலட்சிய நெருப்பைச் சிறு வயதிலேயே சுமந்தவர்கள் உரிய காலத்தில் அதனை அடைந்துள்ளார்கள். வரலாற்றுப் பக்கங்களிலிருந்து ஓர் சிறு சம்பவம்.

★ ★ ★ ★

நெப்போலியனின் பாடசாலை நாட்களில் ஒருநாள் நெப்போலியன் பாடசாலைக்குச் செல்லவில்லை. அன்று கணிதபாடத்தில் அவனது நண்பன் பிழைவிட்டதற்காக ஆசிரியர் நெப்போலியனின் நண்பனை "நீ அந்த முட்டாள் நெப்போலியனின் நண்பன்தானே?" என்று கடிந்து கொண்டார்.

மாலையில் விளையாடும் பொழுது நண்பன்; நெப்போலியனிடம் பாடசாலையில் நிகழ்ந்த சம்பவத்தை விபரித்தான். அதற்கு நெப்போலியன், ''எங்கள் ஆசிரியர் நீண்டகாலம் வாழட்டும்'' என்று இறைவனை இறைஞ்சினான். விளக்கம் கேட்ட நண்பனுக்குச் சிரித்து மழுப்பிவிட்டான்.

காலங்கள் உருண்டோடின, பிரான்சின் சக்கரவர்த்தி நெப்போலியனை, பழைய கணித ஆசிரியரான முதியவர் சந்திக்கச் சென்றார். அரண்மனை அலுவலரிடம் தனது வரவைத் தெரிவித்துத் தான் ஆரம்பிக்கப் போகும் கல்விச்சாலைக்கு சக்கரவர்த்தியின் ஒத்துழைப்பைக் கோரினார்.

நெப்போலியனிடம் விபரம் தெரிவிக்கப்பட்டு ஆசிரியருக்கு நிதியுதவி செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆசிரியர் நெப்போலியனை நேரில் சந்திக்கும் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். சிறிது நேரத்தின் பின் சக்கரவர்த்தியைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டார். சக்கரவர்த்தியுடன் ஆசனபளித்து அமர்த்தப்பட்ட ஆசிரியர் நெப்போலியனை விளித்து ''எனது மாணவன் ஒருவன் சக்கரவர்த்தியாக இருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது'' என்றார். ''உங்கள் புத்திசாலி மாணவன் ஒருவன் சக்கரவர்த்தியாக இல்லையே, முட்டாள் நெப்போலியன் அல்லவோ சக்கரவர்த்தியாக உள்ளான்'' என்று நெப்போலியன் பதிலளித்தானாம்.

★ ★ ★ ★ ★

இச்சிறு சம்பவமானது நெப்போலியன் தன் சிறு வயதிலேயே சக்கரவர்த்தியாகும் இலட்சியத்தைக் கொண்டிருந்ததைக் குறிப்பிடுகின்றது.

வாழ்க்கையில் முன்னேறிய அனைவரும் 'நீரில் மூழ்கியவன் மேலே வரத் தத்தளிப்பது போலும்;' 'கொக்குப் போலும்' தம் இலட்சியத்திலேயே அயராக்காதலுடன் இருந்து இலட்சியத்தை அடைந்துள்ளார்கள்.

## சீலச்செல்வர்...

[14ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவர் இளைப்பாறிய பின், அநுராத புரத்தில், ஏழை பங்காளராய் வசித்தார்; அவரைச் சட்டசபைக்குச் சனங்கள் அனுப்பினார்கள். அவர் கொழும்பில் வெள்ளையர் வீடுகளில் தங்குவார். அவர்களின் குளிப்பறைகளில் கழித்துவிட்ட துவாய்கள், பெனியன்கள், சட்டைகள் என்றிவைகளைச் சேர்ப்பார். ஒரு லொறி கொள்ளத்தக்க அளவு வந்துவிடும். அவர் திரும்புகிறார் என்றறிந்ததும், ஏழைகள் பிள்ளை குட்டிகளோடு வந்து சேர்வார்கள். அவர் ஒருசிறு குடிசையில் கயிற்றுக்கட்டிலொன்றில் படுத்திருப்பார்; சனங்கள் வந்து சேர்ந்ததும், ஒவ்வொருவரையும் விசாரித்துத் தான் சேர்த்துக் கொண்டு வந்த பண்டங்களைப் பங்கிட்டுக் கொடுப்பார். தேர்வு காலங்களில் இவரை எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் கட்டுக்காசை இழப்பவராயிருந்தார்கள். அவர் தமக்கு வாக்குப் போடுங்கள் என்று கேட்பதில்லை; தமக்குரிய சின்னத்தைத் தொப்பியில் கட்டிக்கொண்டு, வாக்குப் போடுமிடத்துக்குப் போய் வருவார்; அவ்வளவே அவர் செய்வது.

ஒரு சமயம் றெயிலைத் தடை செய்யும் எருமைகளைச் சுட வேண்டும் என்றார் சேர் பொன். இராமநாதன்; சுடக்கூடாது என்றார் பிறீமன். என்ன செய்வதென்ற கேள்வி எழுந்தது; என்ன செய்யலாமென்பதை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள் என்றார் பிறீமன்.

**பண்டிதமணி கணபதிப்பிள்ளையின்**
**அத்வைத சிந்தனையிலிருந்து**

---

ஒருவர்:- அந்நிய நாட்டுக்குப் போயும் குத்துச் சண்டையாம்.

மற்றவர்:- அவர்கள் எமது நாட்டு கலாச் சாரத் தூதுவரல்ல எமது இயம தூதுவர்.

---


இரச ஞான திலகங்களின்
தாம்பூலத் தர்ப்பார்.
சுவை ஞான திலகங்களின்
**சுவைத்திடல்.**

**கிரியைப் பொருட்கள், வாசனைப் பாக்கு, மற்றும் பீடா வகைகள்.**
**கேசரி பகோப்றா SP R சுருட்டு.**

**மொத்த சில்லறை வியாபாரம்.**

**தர்சினி அமுதம்.**

**89, 90 பெரிய கடை மார்க்கற்**
**யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்கள்:
**ஆ. சி பரமசாமி அவர்களும், சி. சிவகுமார் அவர்களும்.**

# கண்ணதாசன் கரும்பு

○ விதை இல்லாமல் புல் முளைக்கிறது. வேரில்லாமல் ரோமம் முளைக்கிறது. விதையும் வேருமில்லாமலே அரசியல் முளைக்கிறது.

○ கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது? அது நல்ல நீராக இருந்தால் அதையும் ஒரு இந்தியன் பதுக்கிக்கொள்வான் என்ற பயத்தில.

○ கறுப்புப் பணத்தை யானைகள் பதுக்கி வைத்திருக்கின்றன. அதற்காக கலைமான்கள் கைது செய்யப்படுகின்றன.

○ புகழ் வருவது — பதவி வருவதற்காக! பதவி வருவது - புகழ் போவதற்காக.

○ கடிகாரம் எப்போ மெதுவாகப் போகிறது? காதலிக்காக காத்திருக்கும் போது.

○ கல்லிலே நார் உரிக்க முடியுமா? என்று கேட்கிறார்கள். ஏன் முடியாது. அரசியல் என்பது என்னவாம்.

○ நிலத்தில் வளரும் களைகள் பெரிய மரங்களாவதில்லை. அற்ப ஆசைகள் பெரிய வெற்றியைத் தேடித் தருவதில்லை.

○ மரங்களை விட மனிதன் உயர்ந்தவனா? இல்லை. மரங்கள் இறந்த பின்பும் அவற்றை நீண்ட காலம் வீட்டில் வைத்திருக்க முடியுமே.

○ சோடாவும் மைக்குமில்லாது கூட்டமேது சோமாரியும் கல்மாரியுமில்லாமல் அரசியல் கூட்டமேது.

## அரிய வரிகள்

ஆண்பனையின் நொங்கே அணில் கோதா மாம்பழமே கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்.

* * *

தென்பாண்டிச் சீமையிலே தேரோடும் வீதியிலே மான் போல வந்தவனே யாரடித்தாரோ!

எழுதிச் செல்லும் விதியின் கைஎழுதி எழுதிமேற் செல்லும் தொழுதாலும், அழுதாலும் விதியின் கை மாறாது!

* * *

'' மயக்கத்தில் பிறந்து
மயக்கத்தில் வளர்ந்து
மயக்கத்தில் மறையும் மனிதா
தொட்டிலின் மயக்கத்தில் வளர்ந்தாய்
கட்டிலின் மயக்கத்தில் திரிந்தாய்
மயக்கம் மயக்கம் மயக்கம்''

* * *

பசிவா அங்கே மாத்திரைகள்
பட்டினியால் இங்கே யாத்திரைகள்
இருவேறுலகம்
இதுவென்றால்
இறைவன் என்பவன் எதற்காக?

— கண்ணதாசன்

—கவர் கவிதை—

## சிறகு மீட்கும் சிறை...

ஆகா (ய) யுத்தம் – பருந்தே
இந்தத் தாயிடமிருப்பது விறகல்ல சிறகு
அவள் தியாகத்தில் தீவிரவாதி–தோற்கின்
தியாகியாகவே திரும்பி வருவாள்–ஆனால்
உன் துணிவில் துருவேறிவிட்டது –
உன்னால்
தர்மம் இங்கு தற்கொலை செய்கிறது.
இறங்கி வா இங்கு
புல்நுனியில் காணலாம் பூகம்பம்
புரிந்து வா
துணிவுள்ளவர்க்கே தூக்குமேடை.

— யோஜனா

தந்தை:- நாளைக்கு பரீட்சை ... படியன்

மகன்:- கோயில் திருவிழாப் பாட்டு என்னைக் குழப்புது...... படித்தவையோ திருவிழா நடத்துகினம்.

'பாண் பதங்' காண்பது காங்கேயன் செயல்.

பாண், பணிஸ்,
சொல்லில் கொடுத்து செயலாய்ப்பெறும்
கேக் ஓடர்கள்,
பிஸ்கட் வகைகள்

தயாரிப்புத் தரத்துடன்.

**காங்கேயன் பேக் ஹவுஸ்**
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

எறும்பு ஊர்ந்தால் கற் குழியும் – இந்த
இரும்பில் ஊர்ந்தால் எறும்பு தேயும்.

தரமான, உரமான
இரும்புப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள,

நாடி வரவேண்டிய
கடின உழைப்பின் சின்னம்.

**செல்வா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்,**
இல 217, அருச்சுனா வீதி (ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

'சர்வ நுகர்வுக்கும் சென்றிடுவீர்!'

விவசாய மருந்து வகைகள்
மரக்கறி மற்றும் விருந்து வகைகள்

பால் மா முதல் பலசரக்குவரை

நீங்கள் நாடும்,

கொள்வனவுக் களஞ்சியம்,

**திருச்செல்வம் வர்த்தக நிலையம்**
ஊரெழு, - கரந்தன்.

# பாசக் கயிறுகள்

அவர் மிகவும் ஏழை.... ஏழ்மை அவரை சீமாட்டிகளான தன் மூன்று தங்கைகளிடமிருந்தும் எட்ட முடியாத தூரத்திலேயே வைத்திருந்தது.

அவரின் கஷ்டம் அவரது மகனின் கல்வியில் அதிக ஈடுபாட்டைக் கொடுக்க அவனும் கல்வியே கருந்தனமாகி மெடிக்கல் கொலிஜ்ஜில் இடம் கிடைக்கும் அளவுக்கு உயர்ந்தான்.

ஊரெல்லாம் அவனது கெட்டித்தனத்தைப் புகழ்ந்து 'இனி என்ன மகன் டாக்டராகி விட்டால் உனக்கென்ன கஷ்டம்' என்று தகப்பனை உற்சாகப் படுத்தினர்.

இந்த விஷயம் அவர் சகோதரிக்கு எட்டியதும் எட்டாத உயரத்தில் இருந்த அவர்கள் அவரது எட்டடிக் குச்சுக்கு வரத் தொடங்கினர்.

மூத்தவள் மீனெண்ணை குளிசை, ஹோர்லிக்ஸ், அப்பிள் சகிதம் தமையன் வீடுவந்து ''அண்ணா நீங்கள் மெலிந்திருக்கக் கனவு கண்டனான் அதுதான் ஓடி வநதேன்......'' என்றாள்.

இரண்டாமவள் காஞ்சிபுர பட்டுச் சேலையுடன் வந்தாள். ''நான் மதுரை மீனாட்சி அம்மனைக் கும்பிடும்போது அண்ணியின் நினைவு வந்தது....... அவவுக்குத்தான் இந்தச் சீலை...... இங்கை ஐயாயிரம் பெறும்'' என்றாள்.

மூன்றாமவள் வந்ததும் வராததுமாய் ''அண்ணா நீங்கள் இனிமேல் எங்கடை தோட்டக்காணிக்கு குத்தகைக் காசு தரத்தேவையில்லை'' என்றாள்.

கூடப்பிறந்த சகோதரமா, கூட வராத காசா மேலானது......

சகோதரிகளை நினைத்தபோது அவர் முகத்தில் அர்த்த புஷ்டியான சிரிப்பொன்று நெளிந்தது. ○

# பொருண்மிய மேம்பாடு

விஞ்ஞான எழுத்தாளர் பெ.நா அப்புஸ்வாமி வைத்த விருந்தொன்றில் சத்திய மூர்த்தியும் அவரது ஐந்து வயது மகள் லட்சுமியும் கலந்து கொண்டனர். வெளிநாட்டுத்துணிகள் போர்த்தியிருந்த சோபாவில் உட்காரச் சிறுமி தயங்கியதைக் கண்ட அப்புஸ்வாமி விளக்கம் கேட்க, சிறுமி காதோடு காதாக ''அந்த அயல் நாட்டுத் துணியை நான் தொடமாட்டேன்'' என்றாள். ''நான் கதர் வேட்டி கட்டியிருக்கிறேன். நான் சோபாவில் அமர்ந்து கொள்கிறேன் நீ என் மடிமீது அமர்ந்து கொள்'' என்று அப்புஸ்வாமி கூறி அச்சிறுமியை தம் மடி மீது அமர்த்தினார்.

முன்னேற்றம் என்பது 'உள்ளது சிறத்தல்' எனக்கருதுவோமாயின்; தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினரின் கண்காட்சியைப் பார்வையிட்டபின் மன நிறைவடைவோம். ''பச்சைத்தங்க'மென மரங்களைப் பாதுகாக்கும் நோக்கிலிருந்து உள்ளூர் வளங்களைப் பூரணமாக, உச்சசப்பயன்பாடாக – பயன்படுத்தி ஈழத்தினை தன்னிறைவுள்ளதாக்கும் நன்னோக்கைக் காணக்கூடியதாயுள்ளது. மேம்பாட்டுக்கழகத்தினரின் சேவை மேதினி வியக்க ஓங்கட்டும் என சிரித்திரன் வாழ்த்துகின்றான்!

ஞானபானு

---

*ஒருவர்:-* *டாக்டர் மனைவிக்கு கிளாலிக் காச்சல் மகனுக்கு பரீட்சைக் காச்சல் மருந்து தாருங்க.*

*டாக்டர்:-* *இது கற்பனைக் கிருமி... நித்திரை மாத்திரை தாறன்.*

# சிறுத்தையும் நரியும்

ஒரு சிறுத்தையின் குகைக்குள் ஒரு மான் தெரியாத்தனமாக நுழைந்துவிட்டது. அப்பொழுது சிறுத்தை அங்கு இல்லை. அந்த மான் சினையாக இருந்தது. குகைக்குள் வந்த சிறிது நேரத்தில் அது இரண்டு குட்டிகளை ஈன்றது. மறுநாள் மாலை சிறுத்தை அந்தக் குகைக்கு வந்தது. அது உள்ளே நுழைவதைப் பார்த்த மான் பயந்துவிட்டது.

''ஐயோ, இது என்னையும் என்குட்டிகளையும் கொன்று தின்று விடுமே என்ன செய்வேன்?'' என்று தத்தளித்தது- ஆனால் தன்னை உடனே தைரியப்படுத்திகொண்டு ஒரு தந்திரம் பண்ணிச் சிறுத்தையை விரட்ட முடிவு செய்தது.

சிறுத்கையின் காதில் விழும்படியாக ''என் குட்டிகளே! நேற்றுச் சாயங்காலம் தானே ஒரு சிறுத்தையைக் கொன்று உங்களுக்கு ஆகாரமாகக் கொடுத்தேன். இன்றும் ஒரு சிறுத்தை வேண்டுமென்று கேட்கிறீர்களே! தினமும் ஒருசிறுத்தை எங்கிருந்து கிடைக்கும்?'' என்று உரத்த குரலில் சொன்னது.

இதைக் கேட்டுச் சிறுத்தை பயந்துவிட்டது. ''உள்ளே போனால் என் உயிருக்கு ஆபத்து'' என்று சிறுத்தை திரும்பிவிட்டது.

போகும் வழியில் சிறுத்தை ஒரு நரியைக் கண்டது. அந்த நரியிடம், ''என் குகைக்குள் ஒருபெரிய ராக்ஷஸமான் தன் குட்டிகளோடு இருக்கிறது. அது ஏற்கெனவே, ஒரு சிறுத்தையைக் கொன்று தின்றுவிட்டதாம். இன்று நானும் அகப்பட்டிருப்பேன். நல்லவேளையாக விஷயம் தெரிந்து ஓடிவந்து விட்டேன்'' என்று சொன்னது.

நரிக்குச் சந்தேகம். மான் எங்காவது சிறுத்தையைக் கொன்று தின்னுமா என்று. அது ஏதோ தந்திரம் பண்ணிச்சிறுத்தையை




எங்கையப்பா கான்பாக்கோடை......?

வேறை எங்கை......அவள் பொடிச்சிக்கு கலியாணம் வருகுதெல்லே...... பாஷனா நகை வேணுமாம் — அதுக்கு தான் போறன் —

ஆம்

துர்க்கா நகை தொழிற்சாலை

இல. 71, கன்னாதிட்டி வீதி, - யாழ்ப்பாணம்.

விரட்டிவிட்டது என்று நினைத்தது நரி. சிறுத்தையோடு போய் அதை அடித்துக் கொன்று அதையும் குட்டிகளையும் சாப்பிட வேண்டுமென்று நரிக்கு ஆசை உண்டாகி விட்டது.

"சிறுத்தையே! நீ என்னோடு வா. அந்த மானையும் குட்டிகளையும் நாம் இருவரும் கொன்று சாப்பிடுவோம். மானைக் கொல்ல எனக்கு வழி தெரியும். நீ பயப்படாமல் என்னோடு வா" என்று சொல்லி அதை அழைத்துக் கொண்டு குகைக்குச் சென்றது. நரி குகைவாசலுக்கு வந்ததும் சிறுத்தை உள்ளே வரப் பயந்து வெளியிலேயே நின்று விட்டது. அப்போது நரிக்கும் பயம் உண்டாகிவிட்டது. 'அது ராக்ஷஸ மானாக இருந்து நாம் தனியே உள்ளே போனால் ஆபத்தாயிற்றே. சிறுத்தை வெளியில் நிற்காமல் ஓடிவிட்டால் நாம் உயிரை இழந்து விடுவோம். சிறுத்தை துணைக்கு இருந்தால் சமாளித்து விடலாம். ஆயிரமானாலும் மான்தானே? சிறுத்தை ஓடிவிடாமல் நிற்க ஒரு தந்திரம் செய்யவேண்டும்' என்று நினைத்தது. ஒரு கயிற்றை எடுத்துத் தன் கழுத்தில் சுற்றி முடிச்சுப்போட்டு மற்றொரு துணியைச் சிறுத்தையிடம் கொடுத்தது. இதை நீ கழுத்தில் கட்டிக்கொண்டு வெளியே நில். நான உள்ளே போகிறேன். மானைக் கொல்கிறேன். உன் உதவி தேவைப்பட்டால் கயிற்றை இழுக்கிறேன். நீ உள்ளே வா. கொல்ல முடியாவிட்டால் நானே ஓடி வந்து விடுகிறேன்" என்று சொன்னது. சிறுத்தையும் கயிற்றின் மற்றொரு நுனியைத் தன் கழுத்தில் சுற்றிக்கொண்டது.

நரி உள்ளே நுழையும் போதே, மான் அதைப் பார்த்து, "நரியே! எனக்கும் என் குட்டிகளுக்கும் மூன்று சிறுத்தைகளைக் கொண்டு வரச்சொன்னேன். நீ ஒரு சிறுத்தையை மட்டும்தானே கொண்டு வந்திருக்கிறாய்? இதைத் தின்று நாங்கள் பசியாற முடியுமா?" என்று உரத்த குரலில் சொன்னது. வெளியே நின்ற சிறுத்தையின் காதில் இவ் வார்த்தைகள் தெளிவாகக் கேட்டன. உடனே, "இந்த மோசக்கார நரி என்னைத் தந்திரமாக இங்கே கொண்டு வந்து இருக்கிறது என்பது இப்பொழுது அல்லவா தெரிகிறது?" என்று சொல்லி அங்கிருந்து ஓட ஆரம்பித்தது. அப்போது நரியின் கழுத்தைக் கயிறு இழுக்க ஆரம்பித்தது. சிறுத்தை ஓடிவிட்டால் தனக்கு ஆபத்து என்று நரி கயிற்றை இழுத்தது. இரண்டும் ஒன்றை ஒன்று இழுக்கவே இரண்டின் கழுத்துக்களும் இறுகி, இரண்டும் செத்து விழுந்தன. □

## சிரித்திரன் அகராதி

| | |
|---|---|
| ✳ பசி:- | 'பத்து' உணர்வின் விபத்து. |
| ✳ குத்துவிளக்கு:- | முதல் இழந்த முதலாளி கணக்காய்வு செய்யும் கலங்கரை விளக்கம். |
| ✳ நட்சத்திர வானம்:- | இரவு வான் மயிலின் தோகை விரிப்பு. |
| ✳ பிறை:- | கடவுள் வெட்டி வீசிய நகம். |
| ✳ ஊசி:- | தலையில்லா வழிகாட்டி. |
| ✳ பூமி:- | 'கோள்' நிறைந்த கோள். |
| ✳ சுடர்:- | அகல் விளக்கு அரங்கின் நர்த்தகி. |
| ✳ செவி:- | பீடி வைக்கும் பரண். |

**நம்பிக்கை**

வாஸ்கொடகாமாவின் நம்பிக்கை புதியநிலத்தைக் கண்டுபிடித்தது.

கொலம்பசின் நம்பிக்கை அவன் தன் தாய் நாட்டுக்கு ஒரு புதிய நிலத்தைத் தந்தது.


ஆயுதங்களில்லாத சர்ச்சலின் நம்பிக்கை இரண்டாவது உலகப்போரின் போது இங்கிலாந்துக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

# வாசக நேயர்களே மன்னிக்கவும்

சிரித்திரன் சிக்கல் V இற்கான விடை 'புளொக்' கீறும் பொழுது ஏற்பட்ட வழுக் காரணத்தினால், இம்முறை பிரசுரிக்கப்படவில்லை. அதனால் ஆசிரியர் வாசக நேயர்களிடம் தனது மன்னிப்பைத் தெரிவிக்கின்றார். ஆனால் இம்முறை புளொக் சரியாகப் பிரசுரிக்கப்படும்.

இங்கே வெட்டுக

இங்கே வெட்டுக



## சிரித்திரன் சிக்கல் VI

பங்குபற்றுபவரின் பெயர் ...................................

......................................................

முகவரி ......................................................

......................................................

......................................................

வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

இங்கே வெட்டுக

இங்கே வெட்டுக

அறிவுறுத்தல் 1) முடிவு திகதி:- 20 - 10 - 93

(2) மேற்காட்டப்பட்ட வரிப்படத்தில் எந்த ஒரு பக்கத்திலும் உள்ள அறுகோணங்களில் (4) இடப்படும் எண்களின் கூட்டுத்தொகை எப்பொழுதும் 78 ஆக இருத்தல் வேண்டும்.

(3) ஓர் எண் ஒரு முறை மட்டுமே உபயோகிக்கப்படல் வேண்டும்.

(4) ஆசிரியரின் விடையுடன் ஒத்த முதலாவதாகவும் இரண்டாவதாகவும் தெரிவு செய்யப்படும் விடைகளுக்கு முதலாம், இரண்டாம் பரிசுகள் வழங்கப்படும்.

இதுதவிர ஆசிரியரின் விடையோடு ஒத்த மேலும் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் ஐவருக்குத் தலா 50/- வழங்கப்படும்.

முதலாம் பரிசு - 150/- இரண்டாம் பரிசு - 100/-

**விதிகள்:**

(i) போட்டிப்பத்திரங்கள் முடிவுத் திகதிக்கு முன்போ அல்லது அன்றோ வந்து சேரத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும் காலதாமதமாயின் நிராகரிக்கப்படும்.

(ii) விடைகள் யாவும் சிரித்திரனில் பிரசுரிக்கப்பட்ட போட்டிப் படிவத்திலேயே செய்யப்படல் வேண்டும். அவ்வாறில்லையேல் நிராகரிக்கப்படும்.

(iii) அனுப்பவேண்டிய முகவரி:- சிரித்திரன் 550, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தபால் உறையின் இடது பக்கத்தின மேல் மூலையில் ''சிரித்திரன சிக்கல் போட்டி vi'' எனக்குறிக்கப்படல் வேண்டும்.

(iv) பரிசில்கள் பெறுபவர்கள் 550, காங்கேசன்துறை வீதியிலுள்ள சிரித்திரன் காரியாலயத்தில் வந்து தமது பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**(சிக்கல் - vi இற்குரிய பரிசினை அருச்சுனா அரிசி ஆலை (அரசடி வீதி, கரவெட்டி ஸ்தாபனத்தினர் வழங்குவார்கள்.)**

(v) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது இது தொடர்பாக கடிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எதுவித தொடர்பும் அனுமதிக்கப்படமாட்டாது.
''வாசகர்களின் சிந்தனையைத் தீட்டுவதே சிரித்திரனின் அபிலாசை''

---

ஒருவர்:- எப்படியண்ணை தர்மதீவின் தர்மம்

மற்றவர்:- யாழ்ப்பாணத்தில எரிபொருள் தட்டுப்பாடு தென்னிலங்கையில் ரப்பரில் போட்டு மனிதனை கொளுத்துறாங்கள்.

சோதிடர்:- தம்பி பரீட்சை முடிஞ்சுது. எத்தின A வரும் எத்தின B வரும்.

மாணவன்:- நீங்கள் சோதிடரல்லோ சொல்லுங்கோவன் பார்ப்பம்.

---


'எண்சாண் உடம்பில் பிரதானம் சிரசு
சிரசிற்கு பிரதானம் சீயாக்காய்'

★ சீயாக்காய்
★ பயறு
★ மிளகாய்
★ உழுந்து

மற்றும் தானிய வகைகளின்
பொடித்தல் நிலையம்.

கோப்பி போன்ற அரைத்தல்கள்
மற்றும்
மா திரித்தலின் திறமான
'மா' ராஜா.

நீங்கள் நாடிச்செல்லவேண்டிய இடம்,

# ராஜா கிறைண்டிங் மில்

புகையிரத நிலையச் சந்தி, - மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

# பின் முறுவல்

**வாமதேவன்:-** ஏன் பொம்பிளையை 'ரேப்பால்' அளந்து பார்க்கிறீர்?

**மற்றவர்:-** வெளிநாட்டுக்கு அனுப்பப் போறன் மாப்பிளை பொம்பிளையின் அளவு எடுத்து அனுப்பட்டாம்!

---

**ஒருவர்:-** வெளிநாட்டுக் குடியேற்றத்திட்டம் நிராகரிப்பாம்?

**மற்றவர்:-** எங்க நாட்டில் சிங்களக் குடியேற்றம் இன்னும் நிராகரிக்கப்படவில்லைத்தானே!

---

ஒருவர்:- ஆஸ்பத்திரிதான் பாதுகாப்பான இடம் பயமில்லை.

மற்றவர்:- ஏன்?

ஒருவர்:- எங்கடை பொடியள் இயமனுக்கும் பாஸ் குடாங்கள்.

---

**பாலன்:-** எப்பிடிப் போகுது காலம்.

**சோமு:-** முன்பு மடியில் காசு கொண்டு போனால் வண்டிலில் கொண்டு வரலாம். இப்ப காசை வண்டிலில் கொண்டு போனால்மடியில்கொண்டு வரலாம்.

---

**ஒருவர்:-** மூண்டாம் பிறை பார்க்கவில்லையா?

**மற்றவர்:-** சுப்பர்சோனிக், புக்காரா விட்டால்தானே!

---

**ஒருத்தி:-** ஜேர்மனியிலிருந்து மகன் அனுப்பிய பணத்தை என்ன செய்தாய்?

**மற்றவள்:-** ஜேர்மனியிலிருந்த மாப்பிளைக்குச் சீதனமாகக் குடுத்திட்டன்!

---

**பெண்:-** நீங்கள் முன்பு ஒரு திருமணம் செய்தனீங்களாம்?

**மாப்பிளை:-** மறதி மனிதனுக்கு சர்வசாதாரணம்; நீங்கதான் அதை நினைவுபடுத்துறீங்க!

---

**ஒருவர்:-** எஞ்ஜினியர் மாப்பிள்ளைக்கு என்ன சீதனம் கொடுத்தாய்?

**மற்றவர்:-** கராச்சாவி, பணப்பெட்டிச் சாவி, வீட்டுச்சாவி!

---

**ஒருவர்:-** அரிச்சந்திரன் நாடகமொன்று போடுகினம்.

**மற்றவர்:-** அரிச்சந்திரன் உயிர்பெற்றால் பெட்டிசம் போடுவாங்க.

இந்த இன்பமும் சொந்தெமதானால்
வேறெந்த இன்பமும் இங்கு வேண்டாம்.

❋ மனங்குளிர் பானங்கள்.
மற்றும்
❋ விதம் விதமான
❋ சுவைகளின் சுரங்கம்.
❋ ஐஸ்கிறீம்
❋ வகைகளின் அரங்கம்.

**ரஜனி கிறீம் ஹவுஸ்.**
பிரதான வீதி, ஆறுகால் மடம்.

★ மரக் கொள்கலன்கள்
★ இரும்பு நிர்மாண வேலைகள்
மற்றும்
★ ஒப்பந்த வேலைத்திட்டங்களின் தொழில்
நுட்பவியலாளர்கள்



''உதைபந்தாட்டத்தில் கிடைத்த
கிண்ணமா''

''இல்லை, அவர்கள் ஒப்பந்த
வேலைகளுக்காக கிடைக்கும் வெற்றிக்
கிண்ணம்''

# ஹைற்றோ புறடக்ஸ்

**"HYDRO PRODUCTS"**

முதலாம் ஒழுங்கை, தெல்லிப்பளை வீதி,
வட்டுக்கோட்டை.




தூரமான இடங்களுக்கு
பாரமான பொருட்களை
'பாரதூரமான' பாதுகாப்புடன்
கொண்டு வந்து தருபவர்கள்.

# சாந்தா
# ரான்ஸ்போட்ஸ்

தெல்லிப்பளை.

தற்போதைய முகவரி
ஆர்க் லேன்,
உடுவில்.

உரிமையாளர்:- திரு க. இரத்தினம்

மாறன் பதிப்பகம், 664, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

என் கடன் 'பணிஸ்' செய்து கொடுப்பதே.

தக தகக்கும் தணலில் வெந்து
கம கமக்கும் வாசனை தந்து
முகம் மலர அகம் மலரவைக்கும்

★ பிறந்த நாள் கேக் வகைகள்

★ பிஸ்கட்

★ பாண்

போன்ற இன் தீன் பண்டங்களின்

'மா' பொருட்சாலை

# பாண்டியன்தாழ்வு

# பேக்ஹவுஸ்

கொழும்புத்துறை வீதி, - பாண்டியன் தாழ்வு.

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சீவியம்

நகை: 32 ஆடி, ஆவணி - 1993 சுவை: 04


## முன் முறுவல்

ஒருவர்:- அல்வா எடிசனுக்கு கனவில நல்ல அடி போட்டிட்டன்.

மற்றவர்:- ஏனடாப்பா

ஒருவர்:- அந்தாளின்ர கண்டுபிடிப்பால ஒலி பெருக்கி இப்ப காதைத்துளைக்குது,

---

ஒருவர்:- என்ன வாடிப் போயிருக்கிறீர். பிள்ளையில்லையென்ற பிரசரோ?

மற்றவர்:- இல்லை பிள்ளைக்கு பேர் வைக்க யோசித்ததால் பிரசர்!

---

போஸ் மாஸ்டர்:- உன்னுடைய நற்சாட்சி பத்திரமில்லாமல் மணியோடர் மாற்ற முடியாது.

ஒருவர்:- நான் கொள்ளைக்காரனின் மகன் நற்சாட்சி பத்திரத்திற்கு எங்கே போவேன்.

---

தாய்:- மேன் கடிதம் போட்டிருக்கிறான் பொறுங்கோ வாசிச்சிட்டு சொல்லுறன்

தந்தை:- என்ன எழுதியிருக்கிறான்.?

தாய்:- பொறுங்கோ..... வாறன் கறி அடுப்பிலை

தந்தை:- கறி பார்த்தாச்சு ... சொல்லன்

தாய்:- பிள்ளை பள்ளிக்கூடத்தாலை வந்திட்டான் சாப்பாடு குடுத்திட்டு வாறன்.

தந்தை:- சாப்பாடு குடுத்திட்டாய் இப்ப சொல்லன்

தாய்:- பொறுங்கோ...... பக்கத்து வீட்டு கனகம்மா கூப்பிடுறாள் போட்டு வாறன்

தந்தை:- சரி... ...உப்பிடியே போய்க் கனகம் மாவுடன் கொக்கான் விளையாடியிட்டு வா

---

ஆசிரியர்:- புக்கார பட்டத்திற்கும் பதவிக்கும் என்ன வித்தியாசம்?

மாணவன்:- பதவிக்கு வால் உண்டு. புக்காரா பட்டத்திற்கு வால் இல்லை.

---

ஒருத்தி:- வீடெல்லாம் கழுவினியே, உன்னுடைய விரதம் எப்படிப் போகுது?

மற்றவள்:- மருமகன் திடீரென கொழும்பால் வந்து விட்டார். பக்கத்து வீட்டு சாவலை வாங்கி சரிபண்ணிவிட்டேன்.

# நேயம்

**ஆசிரியர் அவர்கட்கு!**

நிகழ் காலத்தைப் பிரதிபலிக்கும் நிலைக் கண்ணாடியும் மெயில் வாகனத்தார் மனோரதமும் மனதைக் கவர்ந்துவிட்டன. மேலும் இவ்வாறான விடயங்களைப் பிரசுரிக்க.

*மட்டுவில்,* **தவராஜா மோகன்**
*சாவகச்சேரி.*

**சிந்தனைக்கு சிறந்த விருந்து தரும் சிரித்திரனே!**

சிறப்பான உன் ஆக்கம் கண்டு பயனடைந்தோர் எண்ணற்றோர். நிலைக் கண்ணாடி; ஒரு வைத்தியரின் குறிப்பேட்டிலிருந்து... இவை நிச்சயம் சமூகத்திற்குப் பலன் தரும்.

*(சில்லாலை)* **கு. ராம்குமார்**
*வல்வெட்டித்துறை.*

**ஆசிரியர் அவர்கட்கு;**

தாங்கள் நோயுற்றிருந்தது கேள்விப்பட்டோம். நீங்கள் நோயிலிருந்து மீண்டு வந்து சிறப்புடன் சிரித்திரனை வெளிக்கொணர இறைவனை வேண்டுகின்றோம்.

*மானிப்பாய்.* **வசந்தி, மதுரா சகோதரிகள்**

**மதிப்பிற்குரிய சிரித்திரன் ஆசிரியருக்கு,**

சிரித்திரனை தொடர்ந்து வாசித்து சிரித்து சிந்தித்து வருகிறேன். கடந்த ஆனி 1993 இதழ் சிறப்பாக இருந்தது. இந்த இதழின் அட்டைப்படம் அருமை. சிரித்திரனை வாங்கியவுடனேயே நான் முதலில் வாசிப்பது மகுடி கேள்வி - பதில்கள் என்றால் மிகையாகாது. மற்றும் நிலைக் கண்ணாடி, கதைத்தேன் - உணர்வு, போனதும் வந்ததும் என்பன கடந்த இதழில் நன்றாக இருந்தன. பிரச்சனை அர்ச்சனை செய்யப்பட்டும்கூட திருந்துவதாகத் தெரியவில்லையே! 32 ஆண்டுகளாக எவ்வளவோ சிரமங்களின் மத்தியிலும் சிரித்திரனை வெளியிட்டு வரும் ஆசிரியருக்கு பாராட்டுக்கள்!!

**கி. செல்மர் எமில்**
*ஊர்காவற்றுறை*

# நயந்தவை

# பிரச்சனை

*பத்தமேனி,*
*அச்சுவேலி,*
10. 08. 93.

**அன்புடையீர்;**

நான் வைத்தியசாலையில் தங்கியிருந்த நாட்களில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் படிப்பதற்கு விநியோகிக்கப்பட்ட நூல்களை வாசித்து மனநிறைவடைந்தேன். சிகிச்சை பெற்றதோடு அறிவும் பெற்று வீடுதிரும்பச் செய்த நலன்புரியினரின் பணிசிறக்க வாழ்த்துகின்றேன்.

**இங்ஙனம்**
**க. மகேந்திரலிங்கம்**

**லொறி உரிமையாளர்கள் சகலருக்கும் வேகமாக வாகனமோட்டும் அனைவருக்கும்.**

**ஐயாமார்களே!**

நாலுபிள்ளைகளையும் பள்ளிக்கு அனுப்பிவிட்டு; கிளாலிப் பயணத்தால் வருபவர்களை எண்ணிப் பிரார்த்திப்பவர்கள் போல் எம்மையும் உங்கள் வாகன சாகசங்கள் அச்சப்படுத்துகின்றன. வாழ விடுவீர்களா? தொடர்ந்தும் வருத்துவீர்களா?

இங்ஙனம்
பெற்றோர்.

**சிற்றுண்டிப் பிரியர்களுக்கு,**

**ஐயன்மீர்!**

உங்கள் இளவயதில் உங்கள் நாக்கைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தீர்களென்றால் வயதான காலத்தில் என்னைப் போல் சங்கடப்படத் தேவையில்லை. திருவிழாக் காலம் கண்டதையும் தின்றும் குடித்தும் உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**இங்ஙனம்**
**ஓர் நீரிழிவு நோயாளி**

# அர்ச்சனை